***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***STC.No. 201/2015 – P.W. 4 (LW7)***

| | |
|---|---|
| *Name* | வெங்கடேசன் எலும்பு முறிவு பிரிவு அறுவை சிகிச்சை நிபுணர், தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனை |
| *Father/Husband's Name* | பிச்சைக்கண்ணு |
| *Village* | |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *56* |

**எதிரி ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 26.03.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்போது தஞ்சாவூர் கண்ணன் தனியார் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை நிபுணராக பணியாற்றி வருகிறேன்.

கடந்த 19.05.2011 ம் தேதியன்று தஞ்சாவூர் மருததுவகல்லூரி மருத்துவமனையில் எலும்பு முறிவு சிகிச்சை பணியில் இருந்தபோது மன்னார்குடி அரசு மருத்துவமனையில் இருந்து மேல்சிகிச்சைக்காக 15 வயது மதிக்கதக்க செபஸ்டீன் அரவிந்தராஜ் என்ற நபரை உள்நோயாளியாக அனுமதித்தேன். அவருக்கு Xray மற்றும் பரிசோதனைகள் செய்தபோது அவருக்கு வலது கால் பாதம் நசிங்கி இருந்தது மற்றும் வலது காலில் உள்ள பாத எலும்புகள் முறிந்திருந்தது கண்டறியப்பட்டது. அதற்கான சிகிச்சை அளிக்கப்பட்டு 07.06.2011 ம் தேதியன்று மருத்வமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று கொடுத்துள்ளேன். **மேற்படி அவருக்கு வழங்கப்பட்ட Medico Legal opinion அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

காயம்பட்ட நபர் இளவர் என்றால் சரிதான். காயம்பட்ட நபர் கவனக்குறைவாக ஓடும் பேருந்தில் ஏற முயற்சித்து தவறி கீழே விழுந்து சக்கரம் ஏறினால் கூட மேற்படி காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.